சம்பந்தப்பட்ட காரியத்தினை 06 மாத காலத்திகுள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தது.
ஆயினும், சம்பந்தப்பட்ட காரியத்தினை 2020 செப்தெம்பர் இறுதியாகியும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2020 பெப்ரவரி 20 ஆந் திகதிய இலக்கம் அமப/20/0139/215/009 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி மீண்டும் ஒரு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளும் படி அறவிடப்பட்டு இருந்த போதிலும் 2020 செப்தெம்பர் மாதம் இறுதியாகியும் பொறியினை கொள்வனவு செய்வதற்கான அல்லது மாற்று வழியினை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நல்லாட்சி**

**உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| அலுவலகத்திற்காக உள்ளக கணக்காய்வு அலகொன்றினை தாபிக்கப்பட்டில்லாது இருந்ததுடன் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அது போன்று முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட 2019 சனவரி 12 ஆந் திகதிய இலக்கம் DMA/01-2019 கொண்ட சுற்றறிக்கையின் படியும் இது வரையும் செயற்பட்டிருக்கவில்லை. வரி அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவாலும் மீளாய்வு ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வினை மேற்கொண்டு அறிக்கையினை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2019 ஏப்ரல் 06 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு பதவிக்கான உத்தியோகத்தர் ஒருவரை இணைக்கப் பெற்றுத்தருமாறு மற்றும் அதுவரையிலும் பதில் கடமையாற்றும் உத்தியோகத்த ரையாவது இவ் அலுவலகத்திற்கு இணைப்பு பெற்றுக் கொடுக்கும் படி நிர்வாக அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. |

**4 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு முடிவடையும் போது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 100 ஆக இருந்ததுடன் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. அதற்கமைய, நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 30 ஆக இருந்தது. | அத்தியாவசியமான பதவிகளுக்கான பணிக் குழாமினை ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வெற்றிட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையினை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருவதனை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதில் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (நிர்வாக) உதவிப் பணிப்பாளர் (தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப ஆகிய பதவிகளை அங்கீகரிக்கப்பட்ட நாள் முதல் வெற்றிடங்களாக இருந்ததுடன் இது தொடர்பாக பொது சேவை, மாகாண சேவை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் கடிதத் தொடர்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு வெற்றிடங்கள் நிலவின. | - மேற்படி - | அப்பதவிகளுக்கான உத்தியோகத்தர்களை இணைக்கப் பெற்றுத்தருமாறு கடிதங்கள் மூலமாக கோரப்பட்டுள்ளன. |
| (இ) | மூன்றாம் நிலையிலான மொழி பெயர்ப்பு பதவிகள் 02 வெற்றிடங்களாக இருப்பதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் DMS/1120 மற்றும் 2016 திசெம்பர் 30 ஆந் திகதிய கடிதம் மூலம் பேடன்ட் பரிசோதகர் பதவிகள் 10 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இலக்கம் DMS/1120 மற்றும் 2016 திசெம்பர் 20 ஆந் திகதிய கடிதம் மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கான 30 பதவிகளை அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஆயினும் அப்பதவிகளுக்குரிய பதவிகள் 9 மற்றும் 2 என்பன 2020 திசெம்பர் 31 க்கு உள்ளவாறு வெற்றிடங்களாக இருந்தன. | - மேற்படி - | ஏற்றுக் கொள்கின்றேன். அப்பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைக்கப் பெற்றுத் தருமாறு ஒன்றிணைக்கப்பட்ட சேவைக்கான பணிப்பாளர் தலைமை அதிபதியிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. |